## புதுக்கோட்டை மாவட்டம் –

# திருமயத்தில் மாநில அளவிலான கைப்பந்து போட்டி!

## அமைச்சர் எஸ்.ரகுபதி தொடங்கி வைத்தார்!

புதுக்கோட்டை, பிப்.21-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 73வது பிறந்த நாளை முன்னிட்டு புதுக்கோட்டை தெற்கு திருமயம் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி மைதானத்தில் மாநில அளவிலான கைப்பந்து போட்டி நடத்த திருமயம் ஒன்றிய தி.மு.க. சார்பில் முடிவு செய்யப்பட்டது. இதனைத் தொடர்ந்து கடந்த ஒரு வாரமாக கைப்பந்து போட்டிக்காக மைதானம் தயார் செய்யப்பட்டது. இந்நிலையில் போட்டி கள் தொடங்கின. போட்டியானது ஆண்கள், பெண்கள் என இரண்டு பிரிவாக நடைபெற்றது. முன்னதாக முதல் போட்டியினை இயற்கை வளங்கள் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி தொடங்கி வைத்தார். போட்டியின் இரு பிரிவுகளிலும் தலா நான்கு அணிகள் கலந்து கொண்டன. பல்வேறு சுற்றுகளின் முடிவில் வெற்றி தோல்வி நிர்ணயிக்கப்பட உள்ளது. இதில் ஆண்கள் பிரிவில் வெற்றி பெறும் அணிக்கு பரிசாக முறையே ரூ.ஒரு லட்சம், 80, 70, 60 ஆயிரம் வழங்கப்பட உள்ளது. இதேபோல் பெண்கள் பிரிவில் முறையே ரூ.50, 40, 30, 25 ஆயிரத்தோடு இரு பிரிவு வீரர்களுக்கும் வெற்றி கோப்பைகள் வழங்கப்பட உள்ளது குறிப்பிடத்தக்கது. நிகழ்ச்சியில் தெற்கு ஒன்றிய செயலாளர் அழகு சிதம்பரம், சிறுபான்மை அணி ஜான் பீட்டர், மாவட்ட பிரதிநிதிகள் சீமானூர் கணேசன், துரை ராஜா, ரமேஷ், விவசாய அணி சிவகுமார், மாவட்ட துணை அமைப்பாளர் மாரிமுத்து, தொண்டரணி சாமி சுரேஷ், விளையாட்டு மேம்பாட்டு அணி நீலமேகம் உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகி கள், ரசிகர்கள் பலர் கலந்து கொண்டனர்.



## மாவட்டக் கழகச் செயலாளர் - அமைச்சர் எஸ்.ரகுபதி தலைமையில்

# பொன்னமராவதியில் "தமிழ்நாடு தலை குனியாது" மாபெரும் பொதுக்கூட்டம்!

## திருச்சி என்.சிவா எம்.பி சிறப்புரை!

புதுக்கோட்டை, பிப்.21-

புதுக்கோட்டை தெற்கு மாவட்டம். திருமயம் சட்டமன்ற தொகுதி பொன்னமராவதி நகர தி.மு.க. சார்பில் தமிழ்நாடு தலை குனியாது மாபெரும் பொதுக்கூட்டம் 17.02.2026 மாலை.6 மணிக்கு பொன்னமராவதி பட்ட மரத்தான் கோவில் அருகில் கலைஞர் திடலில் தமிழக கனிமவளம் மற்றும் சுரங்கத்துறை அமைச்சர், புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளர், எஸ். ரகுபதி தலைமையில் நடைபெற்றது. பொன்மைராவதி நகர செயலாளர் அ.அழகப்பன், பொன்னமராவதி தெற்கு ஒன்றிய கழக செயலாளர் அ.அடைக்கல மணி ஆகியோர் வரவேற்புரையாற்றினார்கள். கழக துணைப் பொதுச்செயலாளர் திருச்சி என்.சிவா சிறப்புரையாற்றினார்.

அ.முத்து, எஸ்,ஜெயராமன், அழகு சிதம்பரம், இரா.கணேசன், சுதா அடைக்கலமணி, தனலெட்சுமி அழகப்பன், சுந்தரி அழகப்பன், பெரி.அழகப்பன், கா. வெங்கடேஷ், அழ.பழனிச்சாமி, ஆர்.விஜயா, சி.மணி, எம். சிக்கந்தர், அ.தட்சணாமூர்த்தி, ஆர். காளிதாஸ், ஆர்.விகாஸ், ஆர். எம்.எஸ்.செல்வகுமார், தி.ராஜா, சுந்தரி இராமையா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.



திருமயம் தொகுதி பொறுப்பாளர் முத்துக்குமார்,

மாநில மருத்துவர் அணி இணைச் செயலாளர் டாக்டர் எஸ்.ஆர்.அண்ணாமலை ரகுபதி, மாவட்ட அறங்காவலர் குழுத் தலைவர் தவ.பாஞ்சாலன், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் பழ. இளையராஜா, க.ச.த. தென்னரசு, அ.ராமச்சந்திரன், கோவை அ.ராமன், சோம.தேனிமலை, ஆர்.எம்.கருப்பையா, ப.விஜயன், அ.சோமையா ஆலவயல் முரளி சுப்பையா, ஆர்.செல்வநாதன், ஆலவயல் சுப.சரவணன், ஆர்.அப்பால், த.பால சண்முகம், ப.குமார், ஆலவயல் சாமிநாதன், துர்கா தாஸ், பெரி. முருகேசன், எஸ்.ஜாஸ்தீன், எம்.சி. மணி, ச.காவேரி, பழ.சுந்தராசு, சீமாட்டி அ.அப்துல் லத்தீப், ஏ.ஆர்.லோகநாதன், ரா. மேகநாதன் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், வட்ட, கிளைக் கழுகு நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழகமுன்னோடிகள் உள்ளிட்ட ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டனர். முடிவில். மாவட்ட பிரதிநிதி எம்.சிக்கந்தர் நன்றி கூறினார்.

இப்பொதுக்கூட்டத்தில் சிறுவர், சிறுமிகள் மோடி, நிர்மலா சீத்தாராமன் போன்று வேடமணிந்து ஒன்றுமே வழங்கவில்லை என்ற வாசகங்கள் அடங்கிய துண்டு பிரசுரங்களை கையிலேந்தி பொதுமக்கள், அமைச்சர் எஸ்.ரகுபதி, எம்.பி., திருச்சி சிவா ஆகியோரிடம் காண்பித்தனர்.

## 'Taps' ஓய்வூதியத் திட்டம் மூலம் 23 ஆண்டு காலமாக கிடப்பில் கிடந்த –

# 13 லட்சம் அரசு ஊழியர்களின் கோரிக்கையை நிறைவேற்றியவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின்!

## சட்டப்பேரவையில் – அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பெருமிதம்!

*சென்னை, பிப். 21-*

*சட்டப்பேரவையில் நேற்று, விவாதத்தின் போது குறுக்கிட்டுப் பேசிய பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, 'Taps' ஓய்வூதியத் திட்டம் மூலம் - 23 ஆண்டு காலமாக கிடப்பில் கிடந்த 13 லட்சம் அரசு ஊழியர்களின் கோரிக்கையை நிறைவேற்றியவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் - என்று பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.*

*சட்டப்பேரவையில் அவர் பேசியதாவது:*



*The mother of all manifesto regarding Government staff அப்படியென்று பார்த்தீர்களென்றால், இந்த pension schemeதான் கிட்டத்தட்ட 22 வருடங்கள் கிடப்பில் போட்டு, இதில் யாரும் கை வைக்கமுடியாத கிணற்றில்போட்ட கல் மாதிரி இருக்கு என்று சொன்ன போது, தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்கள்தான் Tamil Nadu Assured Pension Scheme என்பதை கிட்டத்தட்ட 13 இலட்சம் பேர் நம்முடைய அரசு ஊழியர்கள் பணியில் இருக்கக்கூடியவர்கள், retired ஆனவர்களெல்லாம் பயன்பெறுகின்ற ஒரு மிகப் பெரிய திட்டத்தை நாம் கொண்டு வந்திருக்கிறோம். So, இது main இதை நாங்கள் முடித்து விட்டோம்.*

*அடுத்தபடியாக பகுதி நேர ஆசிரியர்கள் சார்ந்து நாங்கள் ஏற்கெனவே ஒரு discussion நடத்திக்கொண்டிருக்கிறோம். மிக விரைவாக G.O. pass செய்ய இருக்கிறோம். அதில் அவர்களை எப்படியெல்லாம் observe செய்ய—யாரையும் அப்படியே விட்டுவிட்டுப் போவதில்லை. சட்டமன்றத்தில் நின்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஒரு வாக்குறுதியைக் கொடுக்கிறார்கள் என்று சொன்னால், சொன்னதைச் செய்யக்கூடிய எங்களுடைய தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் அவர்கள், (மேசையைத் தட்டும் ஒலி) அதை நிச்சயமாகச் செய்வார்கள். செய்வதற்கான process நடந்து கொண்டே இருக்கிறது. நான் மீண்டும் சொல்கிறேன், ஜூன் மாதம் நம்முடைய தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள், வந்து இன்னும் என்னவெல்லாம் இருக்கிறதோ அதைச் செய்வதற்கு நாங்கள் காத்துக்கொண்டிருக்கிறோம் என்பதை மட்டும் இந்த நேரத்தில் நான் பதிவு செய்ய கடமைப்பட்டிருக்கின்றேன்.*

*இவ்வாறு அவர் குறிப்பிட்டார்.*

## அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி தலைமையில்

# திருச்சியில் - "தமிழ்நாடு தலைகுனியாது" பரப்புரைக் கூட்டம்!

## மருது அழகுராஜ் - இனிகோ இருதயராஜ் எம்.எல்.ஏ. சிறப்புரை!

திருச்சி, பிப். 21-

திருச்சி கிழக்குத் தொகுதியில் தமிழ்நாடு தலைகுனியாது பரப்புரை பொதுக்கூட்டம் திருச்சி இ.பி. ரோட்டில் திருச்சி தெற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட கிழக்குத் தொகுதியில் தமிழ்நாடு தலைகுனியாது பரப்புரை பொதுக் கூட்டம் நடைபெற்றது.

மாநகரக் கழகச் செயலாளர் மு.மதிவாணன் வரவேற்றிட திருச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளர், அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில் செய்தி தொடர்பு துணைத் தலைவர் மருது அழகுராஜ், கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் இனிகோ இருதயராஜ் ஆகியோர் சிறப்புரையாற்றி னர்.

மலைக்கோட்டை பகுதிக் கழகச் செயலாளர் ஆர்.மோகன் நன்றி கூறினாா.

பொதுக் கூட்டத்தில் தொகுதி பார்வையாளர் கதிரவன் தலைமை செயற்குழு உறுப்பினர் வன்னை அரங்கநாதன், மாநில அணி நிர்வாகி செந்தில், துணை மேயர் திவ்யா, மாவட்ட, மாநகர, பகுதி, வட்டகழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் அனைத்து உள்ளாட்சி பிரதிநிதிகள் கழக முன்னோடிகள் மற்றும் கழக தொண்டர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பேசுகையில்,

பிள்ளைகள் படிக்கும் படிப்பில் அரசியல் நடத்துபவர்கள் தான் ஒன்றிய அரசு அதனுடன் துணை போகும் அதிமுக என எடுத்துரைத்தார்.

அடுத்த தேர்தலை மனதில் வைத்து ஆட்சி நடத்துவதை காட்டிலும் அடுத்த தலைமுறை மனதில் வைத்து ஆட்சி நடத்தக்கூடியவர் தான் நமது தமிழக முதல்வர் என்றும் மேலும் இன்னுயிர் காப்போம் நம்மை காப்போம் 48 எனும் திட்டத்தின் மூலம் மனிதநேயத்தை எடுத்துரைத்தவர் தான் நமது தமிழக முதல்வர் என்றும் ஒருவர் விபத்தின் மூலம் மூளை சாவு ஏற்பட்டால் அவரது உடல் உறுப்புகளை தானம் செய்தால் அவருக்கு அரசு மரியாதை என்பதை முதன் முதலில் வழங்கியவர் நமது தமிழக முதல்வர் தான் என்றும் மேலும் எனது மனதிற்கு மிகவும் நெருக்கமாக இருப்பது தமிழக முதல்வர் கொண்டு வந்த முத்தான திட்டம் அது எதுவென்றால் அண்ணல் அம்பேத்காரின் பேரில் உருவான உயர்வுக்கு படி என்னும் திட்டம் தான் என்றும்

ஆனால் இந்தத் திட்டத்தை கடந்த அ.தி.மு.க. அரசில் படித்த மாணவர்கள் எத்தனை பேர் என்றால் இரண்டு பேர் மட்டும் தான் என்றும் நமது தமிழக முதல்வர் ஆட்சியில் கடந்த நாலே முக்கால் ஆண்டு காலத்தில் ஒரு மாணவருக்கு 35 லட்சம் செலவு செய்து வெளிநாட்டில் அவர்களை படிக்க வைத்து இதுவரை 386 மாணவர்கள் இந்த திட்டத்தின் மூலம் பயனடைந்து வெளிநாட்டில் வேலை பார்த்து வருவதற்கு காரணம் நமது தமிழக முதல்வர் தான் என்றும் இதற்காக தமிழக அரசு 180 கோடி ரூபாய் செலவு செய்துள்ளது என்றும் இதை செலவு என்று தமிழக முதல்வர் பார்க்காமல் முதலீடு என்று பார்த்து வருவதாகவும் எடுத்துரைத்தார் மேலும் மாணவர்களுக்கு கல்வியானது எளிதாக கிடைத்து விடவில்லை என்றும் கடந்த 200 ஆண்டு கால போராட்டத்திற்கு பிறகு தான் நமது பிள்ளைகள் பள்ளிகளுக்கு சென்று கல்வி கற்று வருவதாகவும் இதற்கு காரணம் அண்ணல் அம்பேத்கர் தந்தை பெரியார் கலைஞர் தற்போது உள்ள தமிழக முதல்வர் ஆகியோர் தான் காரணம் என்றும்,



மேலும் தந்தை செய்த தொழிலை மகன் செய்ய வேண்டும் என்ற நிலையை மாற்றிய அரசு திராவிட மாடல் அரசு தான் என்றும் 1938 ஆம் ஆண்டு என்ன புரட்சி ஏற்பட்டதோ அந்த புரட்சி தான் தற்போது வரை தமிழகத்தில் நிலவி வருவதாகவும் மேலும் மத நல்லிணக்கத்தை எடுத்துரைக்கும் ஆட்சியாக இந்த அரசு திகழ்ந்து வருவதாகவும்

மேலும் ஜல்ஜீவன் திட்டத்தை சிறப்பாக நடத்தி வருவது தமிழகம் தான் என பெருமையோடு கூறுவது ஒன்றிய அரசு தான் என்றும் ஆனால் அதற்குரிய 312 கோடி நிதியை தான் ஒன்றிய அரசு வழங்க மறுப்பதாகவும், மேலும் கடந்த இரண்டு வருடமாக கல்விக்கான நிதி 3548 கோடியை நிறுத்தி வைத்திருப்பதும் இதே ஒன்றிய அரசுதான் என்றும், ஆனால் அதே ஒன்றிய அரசுடன் கூட்டணி வைத்திருக்கும் எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் இதைப் பற்றி எல்லாம் கவலைப்படாமல் தமிழக அரசை வசைப்பாடி அரசியல் நடத்திவருவதாகவும் எடுத்துரைத்தார், மேலும் ஒன்றிய அரசு நமக்கு வழங்க வேண்டிய அனைத்து நிதிகளையும் வழங்கினாலே நமது தமிழகம் முன்னேற்ற பாதையில் தான் செல்லும் என்றும் அனைத்து நலத்திட்டங்களும் சிறப்பாக செயல்படுத்த முடியும் என்றும் ஜூன் மாதம் மகளிருக்கு 2000 ரூபாய் வழங்கப்படும் என முதல்வர் அறிவித்தார் ஆனால் ஒன்றிய அரசு முழு நிதியையும் வழங்கினால் தற்போது அந்தத் தொகையை நாம் வழங்க முடியும் எனவும் எடுத்துரைத்தார்,

இதையெல்லாம் மனதில் வைத்துக் கொண்டு தான் எங்கெல்லாம் பாஜக அரசு ஆட்சியில் அமர முடியும் ஆனால் தமிழக மக்கள் ஒரு பொழுதும் இங்கு இடம் அளிக்க மாட்டார்கள் என உணர்த்துவார்கள் ஏனென்றால் இந்த மண் தந்தை பெரியாரால் பண்படுத்தப்பட்ட மண் என்றும் பேரறிஞர் அண்ணாவால் கலைஞரால் தமிழக முதல்வரால் உருவாக்கப்பட்ட மண்ணாக தமிழ்நாடு திகழ்ந்து வருவதாக அமைச்சர் எடுத்துரைத்தார்.

## "மாபெரும் தமிழ்க் கனவு" நிகழ்ச்சி மூலம்

# தமிழ்நாட்டின் வரலாற்றையும் தமிழ்மொழியின் சிறப்பையும் இளைய தலைமுறையினரிடம் சேர்க்கிறார் முதல்வர்!

## அமைச்சர் கோவி.செழியன் பேச்சு!

*சென்னை, பிப். 21-*

*தமிழ்நாட்டின்வரலாற்றையும், தமிழ் மொழியின் சிறப்பையும் இளைய தலைமுறையினரிடம் கொண்டு சேர்க்கும் விதமாக "மாபெரும் தமிழ்க் கனவு" என்ற வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்ச்சியினைதந்தவர்முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் - என்று உயர்கல்வித் துறைஅமைச்சர்முனைவர் கோவி.செழியன்தெரிவித்தார்.*

*சென்னை, செயின்ட் ஜோசப் பொறியியல் கல்லூரியில் நடைபெற்ற 400-வது மாபெரும் தமிழ்க் கனவுநிகழ்ச்சியைமாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் தொடங்கி வைத்தார்.*

*இந்நிகழ்ச்சியில் உயர் கல்வித் துறை அமைச்சர் கோவி.செழியன் பேசியதாவது :-*

*"மாபெரும் தமிழ்க் கனவு" எனும் தமிழ் மரபு மற்றும்பண்பாட்டுப்பரப்புரை நிகழ்ச்சி பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவு நாளான 03.02.2023அன்றுதொடங்கப்பட்டது.இதன்100-வது நிகழ்ச்சி சென்னை அண்ணாநூற்றாண்டுநூலகத்தில்முதலமைச்சர்அவர்களின் தலைமையில் 24.04.2023 அன்று நடைபெற்றது. கல்லூரி இளைஞர்கள் தங்களின் அடுத்த கட்ட இலக்குகளை நோக்கிச்செல்லும்வகையில்இந் நிகழ்ச்சி இருப்பதால், ஒவ்வொரு ஆண்டும் தொடர்ந்துநடத்தப்படும் எனஅப்போதுமுதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்.*

*அவ்வறிவிப்பிற்கிணங்க, "மாபெரும் தமிழ்க் கனவு" நிகழ்வுகள், ஜூலை2023முதல்,தமிழர்களின் மரபு, சமூகப் - பொருளாதாரச் சமத்துவ வளர்ச்சி ஆகியவற்றில்ஆர்வமும், அக்கறையும் ஏற்படுத்தும் வகையில் தமிழ் இணையக் கல்விக் கழகம் மூலம் மேலும் 100 நிகழ்வுகள்நடத்திமுடிக்கப்பட்ட நிலையில்,இக்கல்வியாண்டில் (2025-26), தமிழ் இணையக் கல்விக் கழகத்துடன் உயர்கல்வித் துறையும் இணைந்து, 200 கல்லூரிகளில்200சொற்பொழிவுகள் நடத்தத் திட்டமிடப்பட்டு, இதுவரையில் 199 சொற்பொழிவுகள்நடத்தி முடிக்கப்பட்டுள்ளன. மொத்தமாக 399 நிகழ்வுகள்நடத்திமுடிக்கப்பட்டு, தற்போது 400-வது சொற்பொழிவு நிகழ்ச்சி சென்னை, செயின்ட் ஜோசப் பொறியியல் கல்லூரியில் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.*



*சேர, சோழ, பாண்டியர்கள் என பல மன்னர்கள் ஆண்டதமிழ்நாட்டின்வரலாற்றையும், சிறப்பையும் ஆயிரம் ஆண்டுகள் கடந்தும்இளையதலைமுறையினரிடம் கொண்டு சேர்க்கும் விதமாக "மாபெரும் தமிழ்க் கனவு" என்ற வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்ச்சியினை தந்தவர் முதலமைச்சர் அவர்கள்.*

*மேலும், இளைய தலைமுறையினர்வாழ்க்கையில் எதிர்கொள்ள வேண்டிய சவால்கள், சமூகப் பொருளாதார மேம்பாடு அடைவதற்கான வழிமுறைகள், அறிவியல்மற்றும்தொழில்நுட்ப வளர்ச்சிகள், வேகமாக மாறி வரும் உலகச் சூழலில் தடைகளைத் தாண்டித்தடம்பதிப்பதற்கான வழிகாட்டுதல்கள் ஆகியவற்றை நேரடியாக இவ்வகைச் சொற்பொழிவுகளின் மூலம் கல்லூரி மாணவர்களுக்குமத்தியில் எடுத்துச் செல்லும்போது, ஓர் உணர்வுப்பூர்வமான பந்தத்தைஏற்படுத்திஅவர்களைநல்வழிப்படுத்தஇயலும்.*

*ஒரு தாய் தந்தை செய்யாததை, ஒரு ஆசிரியர் செய்யாததை,ஒருகல்லூரி செய்யாததை முதலமைச்சர் அவர்கள் சிந்தித்து ஒரு கல்வியாண்டில்2இலட்சம் மாணவர்கள்பயன்பெறும் வகையில் 26 சொற்பொழிவாளர்களை 200 நிகழ்ச்சிகளில்பேசவைத்து மாணவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறார்.*

*இந்த அரிய முயற்சியினைமுன்னெடுத்ததமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நமது நன்றிகளை தெரிவிப்போம்.நாம்தமிழ் மொழியை பாதுகாப்போம், தமிழ் மொழியை வளர்ப்போம்,மற்றமொழிகளை விட தமிழ் மொழி தான் சிறந்தது என்று உலகிற்கு காட்ட மாபெரும் தமிழ்க் கனவு திட்டம் பயன்படட்டும்.*

*இந்த நிகழ்ச்சியில் பங்கேற்கும்மாணவர்களுக்கு 'உயர்கல்விமற்றும்வேலை வாய்ப்பு வழிகாட்டி', 'தமிழ்ப்பெருமிதம்'ஆகிய கையேடுகள் வழங்கப்படுகின்றன. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் விருதுகள் வழங்கவும் வழிவகை செய்துள்ளார்கள். அவ்வாறாக, 'தமிழ்ப் பெருமிதம்'சிற்றேட்டிலுள்ள குறிப்புகளைவாசித்துச்சிறப்பாக விளக்கம் அளிக்கும் மாணவர்களைப் பாராட்டி பெருமிதச்செல்வி / பெருமிதச்செல்வன் எனப் பட்டம் சூட்டிச் சான்றிதழ்களும், பரிசும் நிகழ்வின் இறுதியில் வழங்கப்படுகிறது. சொற்பொழிவாளர்களிடம் தரமான கேள்விகளை எழுப்பும் மாணவர்களைப்பாராட்டி கேள்வியின்நாயகி/கேள்வியின் நாயகன் எனப் பட்டம் சூட்டிச் சான்றிதழும் பரிசும் வழங்கப்படுகிறது. மேலும், இந்நிகழ்ச்சியில் 2025-26ஆம் கல்வியாண்டிற்கான பாரதி இளங்கவிஞர்விருதுஒருமாணவருக்கும், ஒரு மாணவிக்கும் வழங்குவதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.*

*இவ்வாறு உயர்கல்வித் துறை அமைச்சர் அவர்கள் பேசினார்.*

*இந்நிகழ்ச்சியில் உயர் கல்வித் துறை செயலாளர் முனைவர்பொ.சங்கர், கல்லூரிக்கல்விஆணையர்திருமதி எ. சுந்தரவல்லி, தொழில்நுட்பக் கல்வி இயக்குநர் முனைவர் ச. விசாகன், எழுத்தாளர் ஆண்டாள் பிரியதர்ஷினி, செயின்ட் ஜோசப் பொறியியல் கல்லூரி தலைவர் முனைவர் பாபு மனோகரன், கல்லூரிக் கல்வி இயக்ககமற்றும்தொழில்நுட்பக் கல்வி இயக்கக அலுவலர்கள், கல்லூரி முதல்வர்கள் மற்றும் 13 கல்லூரிகளைச் சேர்ந்த மாணவர்கள் கலந்து கொண்டனர்.*

# வரும்...!



எங்கள்

மார்ச் (1) ஒன்னின்

மதிநுட்ப அரசியலே

எடப்பாடி அரசியல் முடிவுக்கு வரும்...

எகத்தாள அரசியல் தெளிவுக்கு வரும்..

பா.ஜ.க. அரசியல் தலைக் குனிவுக்கு வரும்..

மறுமுறை மகுடத்துக்கு வரும்...

– என்ன நாஞ்சொல்றது



**மருது அழகுராஜ்**
கழக செய்தித் தொடர்புக் குழுத் துணைத்தலைவர்